සියලු ම හිමිකම් ඇවිරිණි
முழுப் பதிப்புரிமையுடையது
All Rights Reserved

බස්නාහිර පළාත් අධ්‍යාපන දෙපාර්තමේන්තුව
மேல் மாகாணக் கல்வித் திணைக்களம்
Department of Education - Western Province

இரண்டாம் தவணை மதிப்பீடு-2018

| ශ්‍රේණිය தரம் Grade | 11 | විෂයය பாடம் Subject | வரலாறு -I | காலம் - 01 மணித்தியாலம் |
|---|---|---|---|---|

பெயர்:...................................... பரீட்சை இல :..............................

**கவனத்திற் கொள்க.**

- **சகல வினாக்களுக்கும் விடையளிக்க.**
- **இலக்கம் 01 முதல் 40 வரையான வினாக்களுக்கான விடைகளை தரப்பட்டுள்ள 1,2,3,4 எனும் விடைகளிலிர'ந்து தெரிக.**
- **உமக்கு வழங்கப்பட்டுள்ள புள்ளடி விடைப் பத்திரத்தில் மிகப்பொருத்தமான விடையை புள்ளடி (× )இடுக.**

01. கி.பி 5ம் அல்லது 6ம் நூற்றாண்டில் எழுதப்பட்டதாய் கருதப்படும் உள்நாட்டு இலக்கிய மூலாதாரம்,

1. தீபவம்சம் 2. மகாவம்சம் 3. தாதுவம்சம் 4. போதிவம்சம்

02. கம்பளை இராசதானி காலத்திலிருந்து கோட்டை இராசதானி வரையான அரசியலைக் கற்க ஏதுவான முக்கியமான மூலாதாரம்,

1. இராஜாவலிய 2. பூஜாவலிய 3. நிகாய சங்கிராய 4. சாரசங்கிராய

03. இலங்கையில் வரலாற்றுக்கு முற்பட்ட கால தகவல்களை வெளிப்படுத்தும் மூலாதாரம்,

1. மகாவம்சம் 2. கட்டட இடிபாடுகள் 3. கல்வெட்டுக்கள் 4. அகழ்வுகள்

04. வங்சகதா, கல்வெட்டுக்கள் என்பவற்றில் 'நியம்கம்' என அழைக்கப்படுவது,

1. வர்த்தக கிராமம் 2. மக்களால் கைவிடப்பட்ட கிராமம்
3. துறைமுக கிராமம் 4. விவசாய கிராமம்

05. ▪ கமிகமார் பிறருக்கு உதவி செய்யுமளவிற்கு செல்வந்தர்களாக இருந்தமை.

▪ பெற்றோரே தம் மகளுக்கு சமையற் சமையற் கலையில் நிபுணத்துவத்தைப் பெற்றுத் தரல்.

போன்ற விடயங்களை உள்ளடக்கியுள்ள இலக்கிய மூலாதாரங்கள் முறையே,

1. ஜாதகஅட்டகதா, தம்பியா அட்டுவா கெடபதய 2. இரசவாகினிய, சத்தர்மலங்காரய
3. ஜாதக அட்ட கதா, சஹஸ்சவந்தூபகரணய 4. இரசவாகினிய, ஜாதக அட்ட கதா

06. சேனைப் பயிர்ச்செய்கைக்காக வரிச்சலுகை வழங்கிய மன்னன்,

1. நான்காம் உதய மன்னன் 2. நான்காம் காசியப்ப மன்னன்
3. முதலாம் பராக்கிரமபாகு மன்னன் 4. கீர்த்தி ஸ்ரீ நிஸ்ஸங்கமல்ல மன்னன்



kalvi.lk

07. முதலாம் விஜயபாகு மன்னனால் மேற்கொள்ளப்பட்ட சேவைகளில் மிக பிரதானமானதாகக் கருதப்படுவது,

1. உறவுகளை ஏற்படுத்துவதன் மூலம் அயல்நாடுகளுடன் சுமூகமான ஒறவை பேணியமை.
2. சோழ ஆட்சியாளர்களிடமிருந்து நாட்டை விடுவித்து, சுதந்திர இராச்சியமாக்கியமை.
3. அழிவுக்குட்பட்டிருந்த வீதிகள், விகாரைகளை புனரமைத்தமை.
4. பொலனறுவை இராச்சியத்தின் முதன்மை ஆட்சியாளனாகியமை.

08. புராதன காலத்தில் சந்தைகள் முறையான நிர்வாகக் கட்டமைப்பின் கீழ் காணப்பட்டன என்பதனை எடுத்துக்கூறும் மூலாதாரம்,

1. புத்தன்னெஹெல கல்வெட்டு
2. கொத்கல்கந்த கல்வெட்டு
3. மிகிந்தலை சுவர் கல்வெட்டு
4. சொரபொர வாவி தூண் கல்வெட்டு

09. தந்தையிடமிருந்து மகனுக்கு அரசுரிமை கிட்டும் சம்பிரதாயத்திற்கு இணங்க அரசுரிமை பெற்றோர்,

1. வசக மன்னன் - வங்கநாசிக்க மன்னன்
2. துட்டகைமுனு மன்னன் - சத்தாதிஸ்ஸ மன்னன்
3. முதலாம் காசியப்ப மன்னன் - மன்னன் முகலன்
4. முதலாம் விமலதர்மசூரிய மன்னன் - மன்னன் செனரத்

10. கல்வெட்டுக்களில் ''சபாவ'' எனும் பதத்தால் குறிப்பிடப்படுவது,

1. யாப்பு
2. நிர்வாக சபை
3. நீதிமன்றம்
4. ராஜசபை

11. பின்வரும் வசப மன்னன் தொடர்பான கூற்றுகளில் பிழையானது,

1. சுகாதார சேவைகளை பெறும்பொருட்டு விசேட மருத்துவமனைகளை உருவாக்கினார்.
2. இலம்பகர்ண வம்சத்தின் முதலாவது ஆட்சியாளன்.
3. இந்நாட்டின் மாகாண ரீதியான நிர்வாகத்தை ஓர் ஒழுங்குமுறைக்கு கொண்டு வர முயற்ச்சித்தவர்.
4. பாரிய அளவு குளங்களை கட்டுவித்ததில் முதன்மையானவர்.

12. எச்சக்குன்றுகளையும் பாறைகளையும் இணைத்து குளங்களை அமைக்க எமது புராதன பொறியியலாளர்களுக்கு இயலுமாயிருந்தது, என்பதற்கு தரக்கூடிய மிகச் சிறந்த சான்று,

1. அங்கமடில்ல வாவி
2. யோத வாவி
3. மினிப்பே கால்வாய்
4. எலஹர கால்வாய்

13. ஆறாவது அக்கபோதி மன்னன் தொடர்பிலான மிகச் சரியான கூற்று,

1. காலிங்க தேசத்துடன் திருமண உறவினை ஏற்படுத்திக் கொண்டமை.
2. சேர இராச்சியத்துடன் நட்புறவு கொண்டமை.
3. சீனாவுடன் இராஜதந்திர உறவு காணப்பட்டமை.
4. உரோம் தேசத்துடன் வர்த்தக தொடர்பு காணப்பட்டமை.



kalvi.lk

14. புராதன காலத்தில் குளத்தின் நீரைப் பயன்படுத்த அறவிடப்பட்ட வரி,

1. போஜக்கபதி　　2. தக்கபதி　　3. கெடடுகனக　　4.மதரமஜீபக

15. அக்காலத்தில் கிரிய, அமுண, கரீசை எனும் அளவீடுகள் எதற்காகப் பயன்படுத்தப்பட்டன?

1. நிறை அளவிடுவதற்கு　　2. நீளம் அளவிடுவதற்கு

3 காலத்தை அளவிடுவதற்கு　　4. நிலத்தை அளவிடுவதற்கு

16. பின்வருவனவற்றுள் இரண்டாம் பராக்கிரமபாகு மன்னனால் மேற்கொள்ளப்பட்ட சேவைகளை மட்டும் உள்ளடக்கும் விடை

A- தம்பதெனியா கதிகாவத்த நூல் எழுதப்பட்டது.

B- பெலிகல தளதா மாளிகை உருவாக்கப்பட்டமை.

C- சபுமல் இளவரசன் யாழ்ப்பாணத்தை வெற்றி கண்டமை.

D- காலிங்க மாகனை தோல்வியடையச் செய்தமை.

1. B,D　　2.C,D　　3. A,D　　4. A,C

17. பின்வரும் இலக்கிய மூலாதாரங்களையும், எழுதப்பட்ட யுகங்களையும் தொடர்புபடுத்தினால் வரும் விடையானது,

| | |
|---|---|
| 1. குத்தில காவியம் | A- தம்பதெனியா யுகம் |
| 2. சத்தர்மலங்காரய | B- குருணாகல் யுகம் |
| 3. சிதத் சங்கராவ | C- கம்பளை யுகம் |
| 4. தளதா சிரித | D- கோட்டை யுகம் |

1. ACDB　　2. DCAB　　3. CDBA　　4. CDBA

18. கி.பி. 1638,கிஇபி 1766 உடன்படிக்கை தொடர்பான மிகச் சரியான கூற்று,

1. கண்டிய மன்னர்கள் போர்த்துக்கேயருடன் கைச்சாத்திட்ட உடன்படிக்கை.
2. கண்டிய மன்னர்கள் ஒல்லாந்தருடன் கைச்சாத்திட்ட உடன்படிக்கை.
3. போர்த்துக்கேயர் யாழ்ப்பாண இராச்சிய மன்னர்களுடன் கைச்சாத்திட்ட உடன்படிக்கை.
4. கண்டிய இராசதானியின் ஆட்சியாளர்களுடன் ஆங்கிலேய ஆளுநர்கள் கைச்சாத்திட்ட உடன்படிக்கை.

**பின்வரும் வரலாற்று சிறப்பு மிக்க சம்பவங்களைக் கொண்டு, 19ம், 20ம் வினாக்களுக்கு விடையளிக்க.**

A- முதலாம் விமலதர்மசூரிய மன்னன் அரசனாகியமை.

B- ஆறாம் விஜயபாகு மன்னனுக்கெதிராக விஜயபா கொள்ளை ஏற்பட்டமை.

C- முல்லேரியா போரில் போர்த்துக்கேயர் படுதோல்வியடைந்தமை.

D- சேனாசம்மத விக்ரமபாகு கண்டி மன்னனாகியமை.



kalvi.lk

19. மேற்கூறப்பட்ட சம்பவங்களை வரலாற்று காலத்தின்படி ஒழுங்குபடுத்தினால் வரும் விடை,

1. DCAB    2. BACD    3. DBCA    4. CBDA

20. C எழுத்தில் கூறப்படும் போரை தலைமை தாங்கிய எகிரி இளவரசர் அரசரானவுடன் எப்பெயரால் அழைக்கப்பட்டார்?

1. முதலாம் இராஜசிங்க மன்னன்    2. இரண்டாம் இராஜசிங்க மன்னன்

3. ஆறாம் புவனேகபாகு மன்னன்    4. கரல்லியததே பண்டார மன்னன்

21. போர்த்துக்கேயர் யாழ்ப்பாண இராச்சியத்தைக் கைப்பற்ற எத்தனித்ததன் காரணம் பின்வருவனவற்றுள் எது?

1. யாழ்ப்பாண, கண்டி இராச்சிய மன்னர்களுக்கிடையே இருந்த தொடர்புகளை துண்டிப்பதற்கு.
2. யாழ்ப்பாண இராச்சியத்தில் கத்தோலிக்க சமயத்தை பரப்புவதற்கு ஏற்பட்ட தடைகளை நீக்குவதற்கு.
3. இலங்கைத் தீவின் முழுமையான வாசணைத் திரவிய ஏகாதிபத்தியத்தைப் பெறுவதற்கு.
4. வடக்கு பிரதேசத்தின் துறைமுகத்தைப் பெற்றுக் கொள்வதற்கு.

- **பின்வரும் அட்டவணையில் யு-து வரை தரப்பட்டுள்ள தகவல்களை அடிப்படையாகக் கொண்டு 22ம்,23ம் வினாக்களுக்கு விடையளிக்க.**

| வருடம் | ஆளுநர் | வரலாற்று சிறப்புபெற்ற நபர்கள் |
|---|---|---|
| A- 1795 | D-ரொபர்ட் பிரௌன்றிக் | G-ஜோன் டொயிலி |
| B-1803 | E-பிரெட்ரிக் நோர்த் | H-மெக்மோவெல் |
| C-1818 | F- பன் ஏங்கல்பெக் | J- ஐந்தாம் வில்லியம் |

22. இலங்கையில் ஒல்லாந்து கோட்டை ஆங்கிலேயர் வசம் சென்றமை தொடர்பான தகவல்கள் அடங்கிய விடை,

1. BDG    2. AFJ    3. AEJ    4. BFH

23. ஆங்கிலேயர் கண்டியை கைப்பற்ற முன் நடைபெற்ற போர் தொடர்பான தகவல்கள் அடங்கிய விடை,

1.BEH    2. ADH    3. AEG    4.BDG

24. ஆங்கிலேயர் கண்டி இராச்சியத்தை கைப்பற்ற ஏதுவான பிரதான காரணி,

1. சிங்கள பிரதானிகளின் வரப்பிரசாதங்கள் இல்லாமல் போனமை.
2. பிரதானிகள், மக்களின் ராஜ விசுவாசம் குறைந்து போனமை.
3. கண்டி மன்னனால் அமுல்படுத்தப்பட்ட கொடூரமான தண்டணைகள்.
4. எஹலபொல அதிகாரம் ஆங்கிலேயருக்கு பக்கசார்புடையவராய் செயலாற்றியமை.



kalvi.lk

25. அநுராதபுர வணக்கஸ்தலங்களை பாதுகாக்கும் திட்டத்தை உருவாக்கியவர்,

1. அநகாரிக்க தர்மபால அவர்கள்
2. ஹென்றி ஸ்டீல் ஓல்கொட் அவர்கள்.
3. பியதாச சிரிசேன அவர்கள்
4. வலசிங்க ஹரிஸ்சந்திர அவர்கள்

26. ▪யாழ் இந்து கல்லூரி

▪கொழும்பு சாகிரா வித்தியாலயம்.

மேற்கூறப்பட்ட பாடசாலைகளை தோற்றுவித்தோர்,

1. ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர், டி.பி.ஜயா அவர்கள்
2. பொன்னம்பலம் அருணாச்சலம் அவர்கள்- சித்திலெப்பை அவர்கள்
3. ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் - சித்திலெப்பை அவர்கள்
4. பொன்னம்பலம் அருணாச்சல்ம் அவர்கள்- டி.பி.ஜயா அவர்கள்.

- **A-F வரையான தகவல்களைக் கொண்டு 27-29 வரையான வினாக்களுக்கு விடையளிக்க.**

A- விகிதாசார பிரதிநிதித்துவ முறை அறிமுகம்.

B- பொதுசன அபிப்பிராய தேர்தல் அறிமுகம்.

C- அலங்கை ஐந்து மாகாணங்களாகப் பிரிக்கப்பட்டமை.

D- நீதிச்சேவை ஆணைக்குழு நியமிக்கப்பட்டமை.

E- முதன்முறையாக வாக்குரிமை வழங்கப்பட்டமை.

F- இந்நாடு ஸ்ரீலங்கா இனும் பெயரால் அழைக்கப்பட்டமை.

27. கோல்புறூக் யாப்பு சீர்திருத்தம், சோல்பரி யாப்பு சீர்த்திருத்தத்துடன் தொடர்புடைய தகவல்கள அடங்கியுள்ள விடை,

1. A,D  2. A,C  3. D,E  4. A,E

28. 1972ம் ஆண்டு குடியரசு யாப்பில் குறிப்பிடப்படும் தகவல்கள் அடங்கும் விடை,

1.D,A  2. C,E  3. E,D  4. F,E

29. 1978ம் ஆண்டு யாப்பு சீர்த்திருத்தத்தில் காணப்படும் தகவல்களை உள்ளடக்கிய விடை,

1. B,E  2. A,B  3.D,F  4. A,D

30. ▪ கோப்பி இறக்குமதி வரியை குறைத்தமை.

▪ முதன்முறையாக கோப்பி இடிக்க ஆலை ஆரம்பிக்கப்பட்டமை.

கோப்பிச் செய்கை தொடர்பில் மேற்கூறப்பட்ட காரியங்களை மேற்கொண்ட பிரித்தானிய ஆளுநர்கள்களை ஒழுங்கின் படி எழுதினால் வரும் விடை,

1. பிரெட்ரிக் நோர்த், ரொபர்ட் பிரௌன்றிக்
2. தோமஸ் மெட்லண்ட், எட்வர்ட் பாண்ஸ்
3. பிரெட்ரிக் நோர்த் , ஹென்றி வோர்ட்
4. எட்வர்ட் பாண்ஸ், பிரெட்ரிக் நோர்த்



kalvi.lk

31. இந்நாட்டின் தொழிற் சங்கங்களின் முன்னோடியாக காணப்படும் இலங்கை தொழிலாளர் சங்கத்தை உருவாக்கியவர்,

1. திரு.நடேச ஐயர்
2. திரு.என்.எம்.பெரேரா
3. திரு.ஏ.எஸ்.விக்ரமசிங்க
4. திரு.ஏ.ஈ.குணசிங்க

32. 20ம் நூற்றாண்டில் இந்நாட்டு அரசியல் கிளர்ச்சிகளுக்கு முன் நின்றோர்,

1. பழைய பிரபு வகுப்பினர்
2. மத்திய தர வகுப்பினர்
3. நகர்புற, தேயிலைத் தோட்ட தொழிலாளர்கள்
4. மக்கள் முன்னணி கட்சித் தலைவர்கள்

33. 1953இல் இடதுசாரி கட்சிகளால் இந்நாட்டில் ஏற்படுத்தப்பட்ட 'ஹர்த்தால்' கிளர்ச்சி காரணமாக தனது பதவியை இராஜினாமா செய்த தலைவர்,

1. திரு.டி.எஸ்.சேனாநாயக்கா
2. திரு.டட்லி சேனாநாயக்கா
3. திரு.எஸ்.டப்ளியூ..ஆர்.டி.பண்டாரநாயக்கா
4. திரு.ஜோன் கொத்தலாவல

34. சுதந்திரம் பெற முன், இந்நாட்டில் ஆரம்பிக்கப்பட்ட விவசாய குடியேற்றங்களை உள்ளடக்கிய விடை,

1. கல்ஓயா, கந்தளாய், சொரரொ வாவி
2. கிரித்தல, கல்ஓயா, கந்தளாய்
3. மின்னேரியா, மினிப்பே, நாச்சதுவ
4. தேவஹூவ, இரணைமடு, கல்ஓயா

35. மகாவலி அபிவிருத்தித் திட்டத்தில் முதன்முதலில் ஆரம்பிக்கப்பட்ட திட்டம்,

1. பொல்கொல்லயில் மகாவலி கங்கைக்கு குறுக்காக அணை கட்டுதல்.
2. உலர் வலயத்தில் விவசாய குடியேற்றங்கள் அமைத்தல்.
3. கொத்மலை அணையை உருவாக்குதல்.
4. தந்தெனிகலை அணையை உருவாக்குதல்.

36. சிறு ஏற்றுமதி பயிர்களின் ஆராய்ச்சி நிலைய்ம காணப்படும் இடம்,

1. அகலவத்தை
2. லுணுவிலை
3. நுவரெலியா
4. மாத்தளை

37. ஜோன் வைக்கிளிப், ஜோக்ஹன்ஸ், மார்டின் லூதர் கிங் எனும் நபர்கள் பின்வருவனவற்றள் எதனால் பிரபல்யமடைந்தவர்கள்?

1. சமய மறுமலர்ச்சி தொடர்பில் தலைமை வகித்தமையால்.
2. நாடுகாண் பயணங்களுக்கு அனுசரணை வழங்கிமையையால்.
3. மறுமலர்ச்சி காலத்தில் இலக்கியங்கள் எழுதியமையால்.
4. மறுமலர்ச்சி காலத்தில் தேசிய அரசுகளை தோற்றுவித்தமையால்.

38. மறுமலர்ச்சி காலத்தில் ஓவியக் கலைஞராக மட்டுமல்லாது கவிஞராக, பாடகராக, விஞ்ஞானியாக மட்டுமல்லாது ஓர் பெறியியலாளராகவும் மிளிர்ந்தவர்,

1. மைக்கல் அஞ்சலோ
2. ரபாயல்
3.லியனாடோ டாவின்சி
4. கலிலியோ கலிலி



kalvi.lk

39. கைத்தொழில் புரட்சியின் காரணமாக நெசவுத் தொழிலின் அபிவிருத்திக்காக இயந்திரங்களை கண்டுபிடித்தோரை மட்டும் உள்ளடக்கிய விடை,

1. ஹென்றி கோட், ஏப்ரஹம் டபர்ட்
2. தோமஸ் நிவ்கொமன், ஹம்ப்ரி டேவ்
3. வில்லியம் சீமன்ஸ், சாமுவேல் மோஸ்
4. ரிச்சர்ட் ஆக்ரைட்,சாமுவேல் கொம்ப்டன்

40. கைத்தொழில் புரட்சி சமூகத்துறையில் ஏற்படுத்திய மாற்றம்,

1. வகுப்பு ரீதியான சமூக அமைப்பு தோன்றியமை.
2. சுயதேவை பூர்தி செய்து கொள்ளும் பொருளாதாரம் வீழ்ச்சியடைந்தமை.
3. பல்தேசிய கம்பனிகள், வங்கிகள் ஆரம்பிக்கப்பட்டமை.
4. தொழிலாளர்கள் வேலை நிறுத்தங்கள், உரிமை போராட்டங்களை மேற்கொண்டமை.

(1x40=40 புள்ளிகள்)

Education கல்வி அධ්‍යාපන



kalvi.lk

සියලු ම හිමිකම් ඇවිරිණි
முழுப் பதிப்புரிமையுடையது
All Rights Reserved

බස්නාහිර පළාත් අධ්‍යාපන දෙපාර්තමේන්තුව
மேல் மாகாணக் கல்வித் திணைக்களம்
Department of Education - Western Province

இரண்டாம் தவணை மதிப்பீடு-2018

| ශ්‍රේණිය / தரம் / Grade | 11 | විෂයය / பாடம் / Subject | வரலாறு -II | காலம் - 03 மணித்தியாலங்கள் |
|---|---|---|---|---|

பெயர்: ................................ பரிட்சை இல:..............................

**கவனத்திற் கொள்க.**

- **பகுதி –I இல் முதலாவது வினா கட்டாயமானது.**
- **பகுதி-II இல் நான்கு வினாக்களுக்கும், பகுதி- III இல் ஒரு வினாவிற்கும் விடையளிக்க.**
- **விடையளிக்க வேண்டிய வினாக்களின் மொத்த எண்ணிக்கை ஆறு.**

## பகுதி-I

(01)(அ) பின்வரும் (i) இல் தரப்பட்டுள்ள வரலாற்று சிறப்பு மிக்க பிரதேசங்களை, தரப்பட்டுள்ள இலங்கை வரைபடித்திலும், (ii) இல் தரப்பட்டுள்ள வரலாற்று சிறப்பு மிக்க பிரதேசங்களை தரப்பட்டுள்ள உலக வரைபடத்திலும் குறித்துப் பெயரிடுக.

(i)

| | | |
|---|---|---|
| நாச்சதுவ வாவி | எலஹர அணைக்கட்டு | கும்புக்கன் ஓயா |
| ரஞ்சா மடம | பதுளை | பட்டதொம்பலென |
| மாத்தளை | பண்டுவஸ்நுவர | கந்துருகொட |
| பல்லவங்க | காலதித்த | லங்காபட்டணம் (12புள்ளிகள்) |

(ii)

| | | |
|---|---|---|
| கல்கத்தா | பாண்டிச்சேரி | வெனிஸ் |
| பிரான்ஸ் | கருங்கடல் | மலாக்கா நீரிணை |

(06 புள்ளிகள்)

(ஆ) (i) பின்வரும் A,B,C,D யில் தரப்பட்டுள்ள வரலாற்று சிறப்பு மிக்க தகவல்கள் தொடர்பான நபர்களைப் பெயரிடுக.

A- ஜோன் பைபஸ் கண்டி இராச்சியத்திற்கு வரும்பொழுது, கண்டியை ஆண்ட மன்னன்

B- லூல்கந்துர தோட்டத்தில் தேயிலை பயிர்செய்து பரிசோதனை செய்தவர்.

C- இலங்கையில் நாயக்க வம்சத்து முதல் மன்னன்.


D- இலங்கை தேசிய சங்கத்தின் முதல் தலைவர் (04 புள்ளிகள்)



kalvi.lk

A,B எனும் உருக்களைக் கொண்டு வினவப்பட்டுள்ள வினாக்களுக்கு விடையளிக்க.

(ii) (1) A உருவில் காட்டப்பட்டுள்ள நிர்மாணம் எது?**(A)**



(2) இது எப்பிரதேசத்தில் கண்டெடுக்கப்பட்டது?

(3) இது எவ்வரலாற்று யுகத்திற்கு உரியது?

(4) இதன் மூலம் எவ் தொழில்நுட்ப வளர்ச்சி வெளிப்படுத்தப்படுகின்றது?

(04 புள்ளிகள்)

(iii) (1) B உருவில் காட்டப்படுள்ள நபர் யார்?

(2) இவர் விவசாயத்துறை அமைச்சராக எவ் யாப்பு **(B)** சீர்த்திருத்தத்தின் கீழ் பணியாற்றினார்?



(3) அவரது தலைமையில் 1946இல் உருவாக்கப்பட்ட கட்சியின் பெயர் யாது?

(4) 1947 இல் தேர்தலில் அதிகாரத்தைப் பெற்ற இவர் வகித்த பதவி யாது?

(04 புள்ளிகள்)

Education கல்வி

## பகுதி – II

(02) (i) இலங்கையில் வரலாற்றுக்கு முற்பட்ட கால மனிதன் வாழ்ந்த கரையோரப் பிரதேச வெட்டவெளி வாழ்விடங்கள் மூன்றைப் பெயரிடுக. (03 புள்ளிகள்)

(ii) பின்வரும் கிராமங்கள் கல்வெட்டுக்களில் எப்பெயர்களால் குறிப்பிடப்பட்டுள்ளன என்பதைக் குறிப்பிடுக.

A- துறைமுகத்தை அண்டிய கிராமம்

B- குயவர்கள் வாழ்ந்த கிராமம்

C- விவசாயிகள் வாழ்ந்த கிராமம்

D- மீனவர் வாழ்ந்த கிராமம். (04 புள்ளிகள்)

(iii) வரலாற்றுக்கு முற்பட்ட கால யுகத்தில் வாழ்ந்த மனிதனது இறுதிச்சடங்குகள் எவ்வாறு மேற்கொள்ளப்பட்டன என்பதனை இரு உதாரணங்களைத் தந்து விளக்குக.

(05 புள்ளிகள்)

(iv) வரலாற்றுக்கு முற்பட்ட காலத்தில் பயன்படுத்தப்பட்ட தொழில்நுட்பங்களை இரு காரணிகளினூடாக விளக்குக. (06 புள்ளிகள்)



kalvi.lk

(03) (i) அரசர்களின் செயற்பாடுகளின்படி பின்வரும் அரச கோட்பாடுகளையுடைய அரசர்கள் மூவரைக் குறிப்பிடுக.

A- தெய்வம் B- மலையின் அரசன் C- சக்ரவர்த்தி (03 புள்ளிகள்)

(ii) பின்வரும் அதிகாரகள் கல்வெட்டுகளில் எப்பெயர் கொண்டு அழைக்கப்படுகின்றார்கள் என்பதனை ஒழுங்குமுறையில் எழுதுக.

A- உணவுச்சாலை அதிகாரி B- தளபதிகள்

C- நகர கட்டட நிர்மாணி D- அரச செயலகத் தலைவர்

(04 புள்ளிகள்)

(iii) பொது சுகாதார அபிவிருத்திக்காக ,எமது புராதன ஆட்சியாளர்கள் எவ்வாறு செயற்படடனர் என்பதனை இரு உதாரணங்களினூடாக விளக்குக. (05 புள்ளிகள்)

(iv) துட்டகைமுனு மன்னனின் சிறப்பினை இரு காரணிகளினூடாக விளக்குக. (06 புள்ளிகள்)

(04) (i) பின்வரும் வாவிகளைக் கட்டிய மன்னர்களின் பெயர்களை ஒழுங்குமுறையில் எழுதுக.

A-கவுடுளு வாவி B- கலா வாவி C- பதவியா குளம் (03 புள்ளிகள்)

(ii) A,B,C,D யில் தரப்பட்டுள்ள நிர்மாணங்கள் கிடைக்கப் பெற்ற பிரதேசங்களைப் பெயரிடுக.

A- நெல்லளவுடைய தங்கத்திலான இருபத்தொரு இதழ்களைக் கொண்ட பூ பதக்கம்.

B- நிறந்தீட்டப்பட்ட புராதன ஓடுகள்

C- அறுவைசிகிச்சைக்குப் பயன்படுத்தப்படும் புராதன உலோக கத்தரிக்கோல்கள்.

D- இயற்கையான காற்றைப் பயன்படுத்தி இயங்கும் இரும்புருக்கும் உலை.

(04 புள்ளிக்ள)

(iii) புராதன காலத்தில் அபிவிருத்தியடைந்த நீர் தொழில்நுட்பம் காணப்பட்டமையை இரு உதாரணங்களினூடாக விளக்குக. (05 புள்ளிகள்)

(iv) புராதன இலங்கையில் எமது மூதாதையரிடம் அளவை மற்றும் கணித அறிவு காணப்பட்டமையை மூன்று காரணிகளினூடாக விளக்குக. (06 புள்ளிகள்)

(05) (i) போர்த்துக்கேயர் இலங்கைக்கு வரும்போது பின்வரும் இராச்சியங்களை ஆட்சி செய்த மன்னர்களின் பெயர்களைக் குறிப்பிடுக.

A- கோட்டை B-மத்திய மலைநாடு C- யாழ்ப்பாணம் (03 புள்ளிகள்)



kalvi.lk

(ii) பின்வரும் தகவல்களுடன் தொடர்புடைய நபர்களின் பெயர்களை எழுதுக.

A- கி.பி 1505 இல் இலங்கைக்கு வந்த முதல் போர்த்துக்கேய குழுவின் தலைவன்.

B- முல்லேரியா போரின்போது போர்த்துக்கேயரைத் தோற்கடித்த இளவரசன்.

C- பஸ்துன் கோரளை பிரதேசத்தில் கோட்டை அமைத்து போர்த்துக்கேயருக்கு விரோதமாக போர் தொடுத்த வீரன்.

D- கி.பி 1638இல் ஒல்லாந்தருடன் உடன்படிக்கை கைச்சாத்திட்ட மன்னன்.(04 புள்ளிகள்)

(iii) ஒல்லாந்தர் எப்பொழுதும் சமாதானமாக செயற்பட்டமையையும், உயர் பொருளாதார இலாபம் பெறும் பொருட்டு செயற்பட்டமையையும் மூன்று காரணிகளினூடாக விளக்குக. (05 புள்ளிகள்)

(iv) முதலாம் விமலதர்மசூரிய மன்னன் முகங்கொடுத்த சவால்கள் மூன்றினைக் குறிப்பிட்டு, அவற்றை அவர் எவ்வாறு வெற்றி கண்டார் என்பதனையும் விளக்குக. (06 புள்ளிகள்)

(06) (i) ஆங்கிலேயர் இந்தியாவிற்கு வந்து வர்த்தக மையங்களை அமைத்த பிரதேசங்கள் மூன்றினைக் குறிப்பிடுக. (03 புள்ளிகள்)

(ii) பிரித்தானியர் இலங்கை மீது நாட்டஞ் செலுத்த ஏதுவான பிரதான காரணிகள் இரண்டைக் குறிப்பிடுக. (04 புள்ளிகள்)

(iii) எவ்வாறு கி.பி.1815இல் ஆளுநர் ரொபர்ட் பிரௌணறிக்கினால் இலகுவாக கண்டி இராச்சியத்தை கைப்பற்ற முடிந்தது? என்பதனை இரு காரணிகளினூடாக விளக்குக. (05 புள்ளிகள்)

(iv) கி.பி 1818 சுதந்திர போருக்கு காரணமான காரணிகள் இரண்டை விளக்குக.(06 புள்ளிகள்)

(07) (i) பின்வரும் அணைகளை கட்டுவிப்பதற்கு நன்கொடைகளை வழங்கிய நாடுகளைக் குறிப்பிடுக.

A- விக்டோரியா அணை B- ரந்தெனிகல அணை C- கொத்மலை அணை(03 புள்ளிகள்)

(ii) மகாவலி அபிவிருத்தித் திட்டத்தின் நோக்கங்கள் இரண்டைக் குறிப்பிடுக.(04 புள்ளிகள்)

(iii) இந்நாட்டின் விவசாய அபிவிருத்தி தொடர்பிலான அபிவிருத்தியின் பொருட்டு விவசாய குடியேற்ற திட்டம் எவ்வாறு பங்களிப்பு செய்தது என்பதனை சுருக்கமாக விளக்குக. (05 புள்ளிகள்)



kalvi.lk

(iv) சுதந்திரத்தின் பின் இந்நாட்டின் கல்வி, சுகாதாரம் போன்றவற்றின் வளர்ச்சிக்கு அரசாங்கம் மேற்கொண்ட நடவடிக்கைகள் ஒவ்வொன்று வீதம் எழுதி விளக்குக.

(06 புள்ளிகள்)

## பகுதி –III

(08) (i) மறுமலர்ச்சியின்போது தோன்றிய மிகச் சிறந்த ஓவியர்கள் மூவரின் பெயர்களைக் குறிப்பிடுக. (03 புள்ளிகள்)

(ii) நாடுகாண் பயணங்களின்போது பின்வருவோரால் கண்டுபிடிக்கப்பட்ட நாடுகளையும், தரப்பட்டுள்ள நாடுகளை கண்டுபிடித்த நபர்களையும் குறிப்பிடுக.

A-கிறிஸ்டோபர் கொலம்பஸ் B- கெபே சகோதரர்கள்

C- அமெரிக்கா D- பிலிப்பைன் (04 புள்ளிகள்)

(iii) மறுமலர்ச்சியின்போது விஞ்ஞான துறையில் ஏற்பட்ட மாற்றங்களை இரு உதாரணங்களினூடாக விளக்குக. (05 புள்ளிகள்)

(iv) ஐரோப்பிய மறுமலர்ச்சியின் மாற்றங்கள் இலங்கையின் பொருளாதார மற்றும் சமூக துறைகளில் ஏற்படுத்திய மாற்றங்களை இரு உதாரணங்களினூடாக விளக்குக.

(06 புள்ளிகள்)

(09) (i) பிரித்தானியாவைத் தவிர்த்து, கைத்தொழில் புரட்சி ஏற்பட்ட ஐரோப்பிய நாடுகள் மூன்றினைக் குறிப்பிடுக. (03 புள்ளிகள்)

(ii) கைத்தொழில் புரட்சி காலத்தில் பின்வரும் புதிய கண்டுபிடிப்புகளின் கண்டுபிடிப்பாளர்களின் பெயர்களை அழைப்புக்குறிக்குள்ளிருந்து தெரிந்து யுஇடீஇஊஇனு ஒழுங்கில் எழுதுக.

A- பறக்கும் நூனாழி B- மியூல் இயந்திரம்

C- ரோலர் இயந்திரம் D- மின் அடுப்பு (04 புள்ளிகள்)


(iii) கைத்தொழில் புரட்சியின் கரணமாக தொடர்பாடல் துறையில் ஏற்பட்ட வளர்ச்சியை மூன்று உதாரணங்களினூடாக விளக்குக. (05 புள்ளிகள்)

(iv) கைத்தொழில் புரட்சி இலங்கையில் ஏற்படுத்திய அனுகூலமான செயற்பாடுகளை மூன்று காரணிகளினூடாக விளக்குக. (06 புள்ளிகள்)



kalvi.lk

(01)(அ)(i)



(01)(அ) (ii)






kalvi.lk

Education கல்வி අධ්‍යාපන

**எங்கள் குறிக்கோள்**

**எண்ணிம உலகத்தில் மாணவர்களிற்கென சிறந்ததொரு கற்றல் கட்டமைப்பை உருவாக்குதல்.**

அனைத்தும் டிஜிட்டல் மயப்படுத்தப்பட்ட இந்த காலத்தில் பல்வேறு துறைகளும் கால ஓட்டத்துடன் இணைந்து டிஜிட்டல் தளத்தில் பல்கிப்பெருகி வருகின்றன. அந்த வகையில் கல்வித்துறையும் இதற்கு விதிவிலக்கல்ல. இணையவழி கல்வியின் மூலம் கலவித்துறை புதியதொரு பரிமாணத்தை எட்டியுள்ளது. குறிப்பாக கொரோனா பேரிடர் காலத்தில் நாடே முடக்கப்பட்டிருந்தது. இதனால் மாணவர்களிற்கும் பாடசாலை, கல்வி நிறுவனங்களிற்கு இடையிலான தொடர்பு துண்டிக்கப்பட்டது. அந்த இக்கட்டான சூழ்நிலையில் இணையவழி வகுப்புகள் மாணவர்களிற்கு வரப்பிரசாதமாக அமைந்தது என்பதே உண்மை.

இன்று தொழில்நுட்பம் மாணவர்களை தவறான பாதைக்கு இட்டு செல்வதாக ஓர் எண்ண ஓட்டம் மக்கள் மத்தியில் உள்ளது. தொழில்நுட்பம் என்பது ஒரு கருவி மட்டுமே அதை எவ்வாறு பயன்படுத்துகிறோம் என்பதில் அதன் ஆக்க மற்றும் அழிவு விளைவுகள் தீர்மானிக்கப்படுகிறது. உளியை கொண்டு சிலையை செதுக்க நினைத்தால் அவன் நிச்சயம் சிற்பி ஆகலாம். இங்கு பிரச்சினையாக காணப்படுவது மாணவர்களை வழிப்படுத்த தொழில்நுட்ப உலகில் ஓர் முறையான கட்டமைப்பு இல்லாமையே. அதை உருவாக்குவதே எங்கள் நோக்கம். அதை நோக்கியே எங்கள் பயணம் அமையும்.

**எமது இணையத்தினூடாக ஊடாக உங்களிற்கு தேவையான பரீட்சை வினாத்தாள்களை இலகுவான முறையில் தரவிறக்கம் செய்து கொள்ளமுடியும்.**

# kalvi.lk

**கல்வி சார் செய்திகளை உடனுக்குடன் அறிந்து கொள்ள எமது சமூக ஊடக தளங்களின் ஊடாக உடனுக்குடன் அறிந்து கொள்ள முடியும்.**

Viber Community

Whatsapp Channel

Facebook Page